# இரட்சிப்பு

RATCHIPPU

RATCHIPPU = SALVATION

Volume-12 June-2022 Issue-01

Price Rs.5-00 Annual Subscription Rs.60/-


## பெந்தெகோஸ்தே 2022

வாருமே பரிசுத்த ஆவியானவரே
வந்து நீர் எங்களை மாற்றிடுமே
வல்லமை ஆவியைத் தந்திடுமே
வரங்களால் எம்மை நிரப்பிடுமே

பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.அப்-2:1

# Pentecost

When the day of Pentecost had come, they were all together in one place.


Acts 2:1



Pentecost Sunday 5th June 2022

# இயக்குநர் கடிதம்...

From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பான வாழ்த்துக்கள். கடந்த சில மாதங்களாக கொரோனா பெருந்தொற்றின் தாக்கம் முழுமையாகக் குறைந் திருந்த நிலை யில், தமிழ்நாடு உட்பட நம் நாட்டின் பல்வேறு கொரோனா தொற்றின் புதிய வடிவங்கள் மீண்டும் பரவிவருவதாகச் செய்திகள் வருகின்றன. முகக்கவசம், கை-சுத்திகரிப்பு, சமூக இடைவெளி, தடுப்பூசி ஆகிய பாதுகாப்பு முறைகளை கவனமாய்க் கடைபிடிப்போம். வணிகக்கூடங்கள், கல்விக்கூடங்கள், சமூகக்கூடங்கள் மற்றும் தொழுகைக்கூடங்கள் மீண்டும் மூடப்படாத படிக்கு கொரோனாவின் புதிய அலை தடுக்கப்பட நாம் கருத்தாய் ஜெபிப்போம். இந்த ஆண்டு நம் பிள்ளைகள் அனைவரும் ஆண்டிறுதித் தேர்வுகளை எழுதி முடிக்க கர்த்தர் கிருபை செய்தார் மட்டுமல்ல, இந்த ஆண்டில் நம் திருச்சபைகள் அனைத்திலும் விடுமுறை வேதாகமப் பள்ளி (VBS) நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தருக்கே நம் நன்றிபலிகளையும், துதியையும் கனத்தையும் செலுத்துவோம். நமது ஊழியங்களுக்கான வலைதளம் GOOD TIDINGS - RATCHIPPU HOME என்ற பெயருடன் www.ratchippu.in/ratchippu.in என்ற முகவரியில் LAUNCH செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம். எமது தளத்துக்கு விஜயம் செய்து கர்த்தரின் ஆசீர்வா தத்தைப் பெற்றுக்கொள்ள அன்புடன் அழைக்கிறோம். இம்மாத 'ஜெப-ஜன்னல்'- ஜெபங்கள் 10, 17, 24 தேதிகளில் நடைபெறும். 'அனைவரும்-ஊழியத்தில்' என்ற நமது கைபிரதி ஊழிய திட்டத்தில் இணைந்து செயல்பட உங்களை அன்புடன் அழைக்கிறோம். வேதாகம போட்டிக்கான பதில்கள், ஜெப-குறிப்புகள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கை அனுப்பு வோர் ஊழிய-இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (Online-வங்கி விபரம் பக்கம் 19-ல்). தேவசமாதானம் உங்கள் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.


கிறிஸ்துவின் பணியில் உங்கள் உடன் ஊழியன்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

**வேத-வரிகள்-138** **அப்போஸ்தலர்-4:31**


# தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

| | |
|---|---|
| **சத்திய வேதம் (ரேனியஸ்-1840)**<br>அவர்கள் செபம்பண்ணினபொழுது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அல்லாமலும், அவர்களெல்லாம் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, பராபரனுடைய வசனத்தை தையிரித்தோடே சொன்னார்கள். | **பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)**<br>ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தை தைரிய மாய்ச் சொன்னார்கள். |
| **திருவிவிலியம் (பொது-1995)**<br>அவர்கள் மன்றாட்டு செய்தபோது அவர்கள் கூடியிருந்த இடம் அதிர்ந்தது. அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவர்களாய்க் கடவுளின் வார்த்தைகளைத் துணிவுடன் பறைசாற்றினர். | **பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)**<br>பிரார்த்தனை செய்தபிறகு, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டனர். அச்சமின்றி தேவனுடைய செய்தியை தொடர்ந்து கூறினர். |

வசன தியானம் - 132



# இயேசுவின் விண்ணேற்றச் செய்தி
# வாழ்ந்துகாட்டும் நற்செய்திப் பணிக்கு நம்மை அழைக்கிறது



**Acts-1:1,4** அப்-1:1,4


பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, சீடர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள். அப்-1:1,4

---

தூய ஆவியின் வல்லமையால் திருச்சபை தோன்றிய நிகழ்வைத்தான் நாம் 'தூய ஆவியின் திருநாள்' அல்லது 'பெந்தெகொஸ்தே திருநாள்' என்கிறோம். கிறிஸ்து உயிந்தெழுந்த திருநாளின் பின்வரும் 50ம் நாள் 'பெந்தெகொஸ்தே' கொண்டாடப் படுகிறது. பெந்தெகொஸ்தே நாளில் தூய ஆவியானவர் நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகளில் வந்து சீடர்கள் மீது தங்கினார். இது யோவேல் தீர்க்கத்தரிசி சொன்ன தீர்க்கதரிசனத்தின் நிறைவாக அமைந்தது. ''பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்.'' (யோவேல்-2:28).

அப்போஸ்தலர் 2ல் லூக்கா நற்செய்தியாளர் தூய ஆவியாரின் வருகை நடைபெற்றதை விவரிக்கிறார். பெந்தெகொஸ்தே நாளில் இயேசுவின் சீடர் அனைவரும் ஒரே இடத்தில் கூடியிருந்த போது திடீரென்று பெருங்காற்று வீசுவது போன்ற ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகி, அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது. நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகள் அவர்கள் மேல் வந்து அமர்ந்ததை மக்கள் கண்டார்கள்.

அன்று எருசலேமில் தூய ஆவியின் வல்லமை இவ்வாறு வெளிப்பட்டதால் 'இயேசுவின் சீடர்கள்' என்ற ஒரு சிறு கூட்டம் விசுவாச ஐக்கியத்தில் நிலைத்து நின்று உலகையே கலக்கும் ஒரு பெரிய சமூகமாக வளர்ந்து, இன்று தூய ஆவியின் வல்லமையால் நற்செய்தியை பறைசாற்றும் பெருங்கூட்டமாக வாழ்ந்துவருகின்றனர். கல்வி அறிவே இல்லாத சீமோன் பேதுரு உரையாற்றிய போது 3000க்கும் மேற்பட்டோர் திருமுழுக்குப் பெற்றனர். அதே தூய ஆவியின் கிரியைகளால் இன்றும் பல நற்செய்திக் கூட்டங்களில் அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெறுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இன்றும் தூய ஆவியானவர் விசுவாசிகளுக்கு ஆறுதலாகவும் ஊக்கமாகவும் செயல் பட்டுவருகிறார். இன்று நாம் திருச்சபையில், தூய ஆவியில் நமக்கிருக்கும் விசுவாசத்தை அறிக்கையிடுகின்றோம். ஆனால் அந்த விசுவாசத்திற் கேற்ற வாழ்வு நம்மிடம் உள்ளதா? நமது விசுவாசமானது, வழிபாட்டு முறைமைகளில் அடங்கிவிடுகிறதா? பிறரைக் குறைகூறி, பிறர்மீது பொறாமைப்பட்டு, பிறரைக் கெடுக்கும் செயல்களை நாம் கைவிட வேண்டும். திருச்சபை நமக்கென்ன செய்தது? என கேட்காமல் நாம் திருச்சபைக்கு என்ன செய்தோம் என சிந்தித்து, தூய ஆவியை கனப்படுத்துவோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.



அருட்திரு. தர்மராஜா

படைப்பு: REV. SJD. தர்மராஜா, ஆயர் & அபிவிருத்திச் செயலர், இந்திய சுதேச மிஷனரி சங்கம், சென்னை.
REV. SJD. DHARMARAJA, PRESBYTER & HON. PROMOTIONAL SECRETARY, NATIONAL MISSIONARY SOCIETY OF INDIA

பெந்தெகோஸ்தே திருநாள்
சிறப்பு தேவசெய்தி....



அருட்திரு
மார்டின் ஜே.பிலிப்

# வாரும் தூய ஆவியே உம் வல்லமையால் எங்களை நிரப்பும்

## Come Holy Spirit! Fill us with your Power

பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, சீடர்கள் ஒரு மனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் மேல் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள். எல்லாருக்கும் பயமுண்டாயிற்று. அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டது. அப்–16:1,3,4,43

*'God's Message' on 'The Pentecost' by*


# Rev. Martin J. Philip

Presbyter-in-Charge and Pastorate Chairman

CSI Christ Church, Washermenpet Pastorate, Diocese of Madras, Chennai South India


கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே!

இயேசுவின் இனிய திருப்பெயரில் அனைவருக்கும் பெந்தெகோஸ்தே திருநாள் நல்வாழ்த்துக்கள். தூய ஆவியின் திருநாள் எனப்படும் இந்த பெந்தெகோஸ்தே திருநாளின் முக்கியத்துவத்தைத் அறிந்துகொள்ள, அவ்விழா பழைய ஏற்பாட்டின் காலத்தில் எவ்வாறு கொண்டாடப்பட்டது என்பதை தெரிந்துகொள்வது அவசியமா கும். இஸ்ரவேல் ஜனங்கள் வாக்களிக்கப்பட்ட கானான் தேசத்தைச் சுதந்தரித்த பின்னர் சிறு, குறு விவசாயிகளாக மாறிவிட்டனர். மட்டுமல்ல தங்கள் குலத் தொழிலான ஆடு-மாடு மேய்க்கும் தொழிலையும் தொடர்ந்தனர். அவர்கள் தங்கள் வழக்கப்படியே பஸ்கா பண்டிகை, அறுப்பின்பண்டிகை, கூடாரப்பண்டிகை, வாரங்களின்பண்டிகை என அனைத்து பண்டிகைகளையும் தொடர்ந்து கொண்டாடி வந்தனர். எனினும், இப்பண்டிகைகளுக்கு தங்கள் மீட்பின் வரலாற்று விளக்கங் களைத் தந்தனர். இவற்றுள், இஸ்ரவேலர் கடவுளின் பலத்த கரங்களினாலும் ஓங்கிய புயத்தினாலும் எகிப்தை விட்டு வெளியேறிய நிகழ்வு 'பஸ்கா' பண்டிகை யாகக் அடையாளப்படுத்தப்பட்டது (யாத் 12:37-51). பாலை-நிலத்தில் அவர்கள் கூடாரங்களில் வாழ்ந்ததை கூடாரப்பண்டிகையும், எகிப்திலிருந்து வெளியேறிய பின்னர் சீனாய் மலையின் அடிவாரத்தில் கடவுள் அவர்களை சந்தித்து நியாயப்பிரமாணங்களை கொடுத்த நிகழ்வை வாரங்களின் பண்டிகையும், (யாத் அதி.19) நினைவுபடுத்துவதாக அமைந்தன. பஸ்கா பண்டிகைக்கு ஐம்பது நாட்களுக்குப்பின் வாரங்களின் பண்டிகை கொண்டாடப்படுவதால் அதைச் சீனாய் மலையின் அனுபவங்களைக் கொண்டாடும் பண்டிகையாக மாற்றி பெந்தெகோஸ்தே திருநாள் என்றும் ஆசரித்தனர். 'பெந்தெகோஸ்தே' என்ற கிரேக்க பதத்தின் பொருள் 'ஐம்பதாவது' என்பதாகும் (லேவி 2315,16). இந்த பெந்தெகோஸ்தே திருநாள்தான் திருச்சபை உதயமான நாள் (திருச்சபையின் பிறந்தநாள்). ஆகவே கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு...

கிறிஸ்துமஸ் திருநாள், பிதாவின் அன்பைக் கொண்டாடும் பண்டிகை (பிதா)
ஈஸ்டர் திருநாள், கிறிஸ்துவின் தியாகத்தைக் கொண்டாடும் பண்டிகை (குமாரன்)
பெந்தெகோஸ்தே திருநாள், திருச்சபைப் பிறந்தநாள் பண்டிகை (பரி. ஆவி)

இம்மூன்று பண்டிகைகளும் இவ்விதமாய் விசேஷித்தவை ஆகும். விண்ணகத்துக்கு ஏறிச்சென்ற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தூய ஆவியை உலகிற்கு அனுப்பி னார். பெந்தெகோஸ்தெ திருநாளில் இயேசுவின் சீடர்கள் மற்றும் விசுவாசிகள் மீது தூய ஆவியானவர் மிகுந்த வல்லமையோட இறங்கியதால்தான் திருச்சபை என்னும் பேரியக்கம் உருவானது (அப். அதி.2).

தூய ஆவியானவர் துணைநின்றதால், சீடர்களும் அப்போஸ்தலரும் பல மொழி களில் பேசவும், துணிவோடு போதிக்கவும் தொடங்கினர். மக்கள் மத்தியில் மனமாற்றங்கள் நிகழ்ந்தன. மனமாற்றம் அடைந்த அனேகர் திருமுழுக்குப்பெற்று திருச்சபையில் இணைந்தனர். இத்தகைய ஆற்றலை உடைய தூய ஆவியானவர் தான் இன்றும் நமக்கு ஆற்றல் அளித்தும், இயக்கியும் வருகிறார். மட்டுமல்ல, நம்மை புனிதப்படுத்தி அவருடைய சாட்சிகளாக விளங்கச்செய்தும் வருகிறார். இந்த ஆண்டின் பெந்தெகோஸ்தே திருநாளைத் தொடர்ந்து, ‘வாரும் தூய ஆவியானவரே, உம் வல்லமையால் எங்களை நிரப்பும்’ என ஆவியானவருக்கு நம்மை அர்பணம் செய்ய அழைக்கப்படுகிறோம்.

கடவுள் தமது ஒரே பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை மனுக்குலத்தின் மீட்புக்காக அனுப்பினார். இயேசு கிறிஸ்து, தாம் இந்த உலகத்துக்கு அனுப்பப ்பட்டதன் நோக்கம் குறித்து கூறுவதை ‘நாசரேத் பிரகடனம்’ என்னும் அறிக்கை யாக லூக்-4:18,19 வசனங்களில் நாம் வாசிக்கிறோம். அதே திருப்பணியைத் தமது சீடர்களும் செய்யவேண்டும் என்ற நோக்கிலேயே இயேசுவானவர் அவர் களை இவ்வுலகிற்குள் அனுப்பினார். யோவா-17:18ல், ‘‘நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்.’’ என்றும் மத்-28:19ல், ‘‘நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீடராக்குங்கள்.’’ என்றும் சொல்லி அனுப்புகிறார். இன்று நாமும், கிறிஸ்துவால் நிறுவப்பட்ட இறையரசை விரிவுபடுத்தும் பணிக்கு நம்மை அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம். திருச்சபையாக நற்செய்திப்பபணிக்கு நம்மை அர்ப்பணிக்கும் இவ்வேளையில், தூய ஆவியனவர் நமக்குத் தரும் வல்லமை குறித்து சற்று நேரம் தியானிப்போம்.

1. சாட்சி பகர வல்லமை (அப்-1:8): (Power to witness)

‘‘பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்’’ (அப்-1:8) என்றும், ‘‘நீங்க ளும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்’’ (யோவா-15:27) என்றும் இயேசு திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

அன்பின் அடிப்படையிலே சாட்சிபகர, சாட்சியாய் வாழ நாம் அழைக்கப்படுகி றோம். 1கொரி-13:1ல் பவுல், ‘‘அன்பு எனக்கிராவிட்டால்..’’ என்று கூறி ‘அன்பை’ மையப்படத்துகிறார். அன்பின் சேவையே திருச்சபையின் முக்கிய பணியாக இருக்கவேண்டும். அதற்காகவே யோவேல் 2:28ல், ‘மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்’’ எனச்சொல்லி நம்மை அழைத்து 1கொரி-12:8-10ல் கூறப்பட்டுள்ள ‘வரங்களை’ நமக்குத் தந்து அவற்றை பொது நன்மைக்காகப் பயன்படுத்த நம்மை வழிநடத்துகிறாார். இயேசுவைப்போலவே நன்மை செய்து, இறையரசின் விரிவாக்கப்பணிகளில் நம்மை இணைத்துக்கொண்டு அவருக்குச் சாட்சிகளாய் வாழ்வோம்.

2. ஜெபிக்க வல்லமை (அப்-1:14): (Power to pray)

அங்கே அவர்களெல்லாரும்... ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள் (அப்-1:14). பெந்தெகோஸ்தே அனுபவம் மூலம் தூய ஆவியானவர் நமக்கு ஜெபிக்கும் வல்லமையைத் தருகிறார்.

மாற்கு-16:15ல் இயேசு, ‘‘உலகெங்கும் சென்று படைப்பனைத்துக்கும் நற்செய்தியைப் பறைசாற் றுங்கள்.’’ என்றார். ஆனால் சீடர்களோ, அறையினுள்ளே முடங்கிக் கிடந்தார்கள். காரணம்? ‘பயம்’ இயேசுவுக்காகவும் நற்செய்திக்காகவும் உயிரைக் கொடுக்கும் அன்பின் ஆற்றல் அவர்களிடம் இல்லை. ஆனால், தூய ஆவியால் நிரப்பப்பட்ட போது அவர்கள் தங்கள் பயம் நீங்கி துணிவு பெற்றார்கள். அனைவரும் வெளியே வந்து அஞ்சாநெஞ்சுடன் ‘இயேசுவே ஆண்டவர்’ ‘இயேசுவே இரட்சகர்’ என பறைசாற்றினர் (அப்-2:12). இதெல்லாம் எப்போது நடந்தது? தூய ஆவியானவர் தந்த ஜெப வல்லமையை அவர்கள் பெற்றபோது. துன்பம், பாடுகள், சோர்வுகள். இல்லாமை, இயலாமை நேரங்களில் நம்மில் எத்தனைபேர் விசுவாசத்துடன் ஜெபிக்கிறோம்? நாம் செய்யும் பாவங்கள், அக்கிரமங்கள் நாம் ஜெபிக்காதபடி நம்மைத் தடுக்கும். ஆனாலும், அந்த பாவங்கள் நீங்கவும் ஜெபமே அவசியம். சீடர்கள் ஜெபம் செய்தபோத அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு தேவவசனத்தை தைரியமாய் சொன்னார்கள் (அப்-4:31).

இதுவே ஜெபத்தின் வல்லமை. தூய ஆவி தரும் ஜெப-வல்லமை நம்மிடம் உண்டா?

3. பாடுபட வல்லமை (ரோம-8:26): (Power to suffer)

ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார்… ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். (ரோம-8:26). கிறிஸ்துவுக்காக நாம் சாட்சியாய் வாழும்போது இவ்வுலகில் பாடுகளையும் துன்பங்களையும் நாம் சகித்தே ஆகவேண்டும். ஆனால் நமக்கு எப்பேர்பட்ட சோதனைகள், பாடுகள் துன்பங்கள் நேரிடினும் அவற்றை சகித்துக் கொள்ளும் வல்லமையை பரிசுத்த ஆவியானவர் நமக்குத் தருகிறாவராய் இருக்கிறார். பாடுகளை சகிக்க நமக்கு பெலன் தந்து உதவுவதோடு நாம் எவ்வளவு வேதனையுடன் இருக்கிறோமோ அதே வேதனையுடன், விவரிக்க முடியாத பெருமூச்சுகளோடு நமது தூய ஆவியானவர் நமக்காக ஜெபிக்கிறார் என்பதை நாம் ஒருபோதும் மறந்துபோகக் கூடாது.

சகரியா தீர்க்கத்தரிசி சொன்ன, ‘‘பலத்தினாலுமல்ல பராக்கிரமத்தினாலுமல்ல என்னுடைய ஆவி யினாலே ஆகும்.’’ (சக-4:6) என்ற இறைவாக்கின் நிறைவேறலாக, பவுல் கூறும், ‘‘என்னை பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு.’’ (பிலி-4:13) என்ற வசனத்தின்படி தூயஆவியானவரின் உதவியுடன் பாடுகளை எதிர்கொள்ள தூய-ஆவியில் பெலன் அடைவோம்.

ஆம், எனக்கன்பானவர்களே! பெந்தெகோஸ்தே நாளில் தூய-ஆவியானவர் பொழிந்த ருளப்பட்டபோது இயேசுவின் சீடர்கள் கிறிஸ்துவின் உடலுறுப்புகளாக மாற்றம் பெற்றனர். கிறிஸ்துவின் இதயம் அவர்களில் பதிக்கப்பட்டது. இயேசுவின் மாபெரும் கட்டளையை ஏற்று இறையரசை நிறுவும் நற்செய்திப் பணியை அவர்கள் செய்தனர். அதன் பயனாக கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை உருவானது. அந்த ஓட்டத்தின் தொடர்ச்சியாக, கிறிஸ்துவின் மகத்தான பணியைச் செய்ய நம்மை அர்ப்பணித்து, ‘‘வாரும் தூய ஆவியே! உமது வல்லமையால் எங்களை நிரப்பும்’’ என்ற ஜெபத்துடன் செயல்படுவோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
அருட்திரு. மார்டின் ஜே. பிலிப்

# பெந்தெகோஸ்தே ஞாயிறு 2022

## (பெந்தெகோஸ்தே – தூய–ஆவியின் திருநாள்)

கிறிஸ்து உயிர்த்தெழுந்த ‘ஈஸ்டர் ஞாயிறு’-க்கு பின்வரும் 7ம் ஞாயிறு ‘பெந்தெகோஸ்தே ஞாயிறு’ (Pentecost Sunday) என அழைக்கப்படுகிறது. ‘பெந்தக்கோஸ்தே’ என்ற கிரேக்கச் சொல்லுக்கு ‘ஐம்பதாவது’ என்பது பொருள். இது அறுவடைக்காக நன்றி செலுத்தும் யூதத் திருவிழாவான பஸ்காவுக்குப்பின் 50வது நாள் கொண்டாடப்பட்ட யூதப் பண்டிகையைக் குறிப்பதாக அமைந்தது. பின்னாட்களில் கிறித்தவர்களின் திருவழிபாட்டு ஆண்டில், அப்போஸ்தலர் மற்றும் கிறிஸ்துவின் சீடர்களாகிய 120பேர் மீது தூய ஆவியின் பொழிந்ததை நினைவுகூறும் விதமாக ‘தூய ஆவியின் பெருவிழா’ என்னும் பெயரில் அமைந்தது.

இந்த நாளே திருச்சபையின் பிறந்த நாளாகக் கருதப்படுகின்றது. கிறிஸ்துவின் விண்ணேற்ற (பரமேறுதல்) திருநாளுக்குப் பின் 10ம் நாளில் இவ்விழா கொண்டாடப்படுகின்றது. பெந்தக்கோஸ்து சபை இப்புதிய ஏற்பாட்டு நிகழ்விலிருந்தே தனது பெயரைப் பெற்றது. ஆங்கிலிக்கன், லுத்தரன், கத்தோலிக்க திருச்சபை உள்ளிட்ட அனைத்து திருச்சபைகளிலும் இவ்விழா ஆசரிக்கப்படுகிறது.

இந்த ஆண்டில் இம்மாதம் 5ம் நாள் (05-06-2022) தூய-ஆவி திருநாள் (பெந்தெகோஸ்தே ஞாயிறு) கொண்டாடப்படுகிறது.

# திரித்துவ ஞாயிறு 2022

## (திரித்துவத் திருநாள்)


‘திரித்துவ ஞாயிறு’ (Trinity Sunday) எனப்படுவது மேற்கத்தியக் கிறித்தவ பாரம்பரிய ‘ஈக்குமெனிக்கல் - லிட்டர்ஜிக்கல்’ காலண்டரில் தூய-ஆவி பெருவிழாவுக்கு அடுத்து வரும் ஞாயிறு. அதாவது, கிறிஸ்து உயிர்த்த திருநாளான ஈஸ்டருக்குப் பின்வரும் 8ம் ஞாயிறு அன்று கொண்டாடப்படும் ‘மூவொரு கடவுள் பெருவிழா’ ஆகும்.

கடவுள் ஒருவரே. அவரே உலகம் அனைத்தையும் படைத்துக் காத்து ஆண்டு நடத்தி உய்விக்கின்ற கடவுள். அவர் அனைத்தையும் கடந்த பரம்பொருள் ஆவார். ஆனால், அவர் வரலாற்றில் தம்மை மூன்று ஆளுமைகளாக (persons) வெளிப்படுத்தியுள்ளார். இந்த மூவர், தந்தை - மகன் - தூயாவி என்று அழைக்கப்படுகின்றனர். இந்த அடிப்படை சமய நம்பிக் கையே கிறிஸ்தவ பாரம்பரியத்தில் ‘மூவொரு கடவுள் கொள்கை’ (Trinity) எனப்படுகிறது.

கிழக்கத்திய கிறித்துவத்தில் இது பெந்தக்கோஸ்து ஞாயிற்றுக்கிழமையோடு இணைத்து கொண்டாடப்படுகிறது. திரித்துவ ஞாயிறு தினத்தன்று கிறித்தவக் கோட்பாடான மூவொரு கடவுள் பற்றிய இறைநம்பிக்கை சிறப்பாக நினைவுகூரப்பட்டு வழிபாட்டு முறையில் கொண்டாடப்படுகிறது. திரித்துவக் கோட்பாடானது தூய-திருமறையின் அடிப்படையிலானது.

இந்த ஆண்டின் (2022) திரித்துவ ஞாயிறு இம்மாதம் 12ம் நாளில், அதாவது 12-06-2022 அன்று கொண்டாடப்படுகிறது.

வேத ஆராய்ச்சி - 61



Rev. Dr. D. சுரேஷ் ராஜன்

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Author: Rev. Dr. D. Suresh Rajan

சங்கீதம் – 61

Episode - 61

சங்கீதம்:- 1. தேவனே, என் கூப்பிடுதலைக் கேட்டு, என் விண்ணப்பத்தை கவனியும். 2. என் இருதயம் தொய்யும்போது பூமியின் கடையாந்தரத்திலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்; 3. நீர் எனக்கு அடைக்கலமும்; சத்துருவுக்கு எதிரே பெலத்த துருகமுமாயிருந்தீர். 4. நான் உம்முடைய கூடாரத்தில் சதாகாலமும் தங்குவேன்; உமது செட்டைகளின் மறைவிலே வந்து அடைவேன். 5. தேவனே, நீர் என் பொருத்தனைகளைக் கேட்டீர்; உமது நாமத்திற்குப் பயப்படுகிறவர்களின் சுதந்தரத்தை எனக்குத் தந்தீர். 6. ராஜாவின் நாட்களோடே நாட்களைக் கூட்டுவீர். 7. தயையும் உண்மையும் அவரைக் காக்கக் கட்டளையிடும். 8. இப்படியே தினமும் என் பொருத்தனைகளை நான் செலுத்தும்படியாக, உமது நாமத்தை என்றைக்கும் கீர்த்தனம் பண்ணுவேன். சங்:-60:1-8

முன்னுரை:-

பல சங்கீதங்கள் தாவீது அரசர் தமது வாழ்வில் நிகழ்ந்த துயர சம்பவங்களின் மத்தியில் எழுதப்பட்டவை. நமது வாழ்வின் வேதனையான அனுபவங்களுக்குள் கடந்து செல்லும்போது நாம் தேறுதல் அடைவதற்கும், தேவனிடத்தில் நாம் கிட்டிச் சேர்வதற்கும் இச்சங்கீதங்கள் பேருதவியாய் இருக்கின்றன.

கடந்த மாதம் எனக்கு ஏற்பட்ட சுகவீனத்தில் நாம் மரித்துப்போயிருக்க வேண்டும். ஆனாலும், ஆண்டவர் எனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து தமது ஊழியத்தைத் தொடரச்செய்தார். ‘‘ராஜாவின் நாட்களோடே நாட்களைக் கூட்டுவீர்’’ (வசனம்-6பி) என்ற தாவீதின் மன்றாட்டை வாசித்தபோது என் மனதில் மிகுந்த மகிழ்ச்சி வந்தது. நமது ஆயுசு நாட்களைக் கூட்டுகிறவர் தேவன் என்பதை மறுபடியும் நினைவுகூற தேவன் உதவி செய்தார். தேவனுடைய நாமத்துக்கே மகிமை உண்டாவதாக.

1.தேவனை நோக்கிக் கூப்பிடவேண்டும்:- (வசனம்- 2)

என் இருதயம் தொய்யும்போது பூமியின் கடையாந்திரத்திலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுவேன். எனக்கு எட்டாத உயரமாகிய கன்மலையில் என்னைக் கொண்டுபோய் விடும். (வசனம்-2). இந்த பூமியில் வாழும் நாம் அனைவரும் பல்வேறு சூழ்நிலைகளில் சோர்ந்து போகிறோம். அப்படிப்பட்ட நேரங்களில் நாம் யாரை உதவிக்கு அழைக்கிறோம்? யாரை நோக்கிக் கூப்பிடுகிறோம்? பரிசுத்த பைபிள் என்ற வேதாகம மொழிபெயர்ப்பு இவ்விதமாகக் கூறுகிறது: ‘‘நான் எங்கிருந்தாலும், எப்படிச் சோர்ந்துபோனாலும் உம்மை உதவிக்குக் கூப்பிடுவேன்’’ (வசனம்-2மு).

அதே மொழிபெயர்ப்பு, 3ம் வசனத்தில், ‘‘நீரே எனக்குப் பாதுகாப்பு, நீரே என் பகைவரிட மிருந்து என்னைக் காக்கும் பலமான கோபுரம்.’’ என்று கூறுவதையும் வாசிக்கி றோம்.

அன்பர்களே! நாம் சோர்ந்துபோகும்பொழுது, எங்கு செல்லுகிறோம்? யாரிடம் உதவி கோருகிறோம்? என்பதை சிந்தித்து செயல்பட அழைக்கப்படுகிறொம்.

அன்பர்களே! நாம் சோர்ந்துபோகும்பொழுது, எங்கு செல்லுகிறோம்? யாரிடம் உதவி கோருகிறோம்? என்பதை சிந்தித்து செயல்பட அழைக்கப்படுகிறோம்.

கடவுளால் மட்டுமே நம்மைப் பாதுகாக்கவும் வழிநடத்தவும் முடியும். மனிதர்களை நம்புவது மிகவும் ஆபத்தானது என்பதை உணர்ந்தவர்களாக, தாவீதைப்போல தேவனைச் சார்ந்துகொள்ள கற்றுக்கொள்வோம்.

2. தேவனோடு தங்கியிருக்கவேண்டும்:- (வசனம்- 4)

‘‘நான் உம்முடைய கூடாரத்தில் சதாகாலமும் தங்குவேன். உமது செட்டைகளின் மறைவில் வந்து அடைவேன்’’ (வசனம்-4)

என்று தாவீது இங்கே கூறுகிறார். ‘தேவனுடைய கண்களுக்குத் தெரிந்தும், மனிதருடைய கண்களுக்கு மறைந்தும் வாழ்வதே மேலான வாழ்வு’ என ஒரு தேவமனிதர் கூறியிருக்கிறார்.

சாது சுந்தர்சிங் என்ற பக்தரிடம் ஒரு மனிதர், ‘ஐயா! பரலோகம் எங்கு இருக்கிறது?’ என்று கேட்டாராம். அதற்கு சாது சுந்தர்சிங் அவர்கள், ‘இயேசு எங்கு இருக்கிறாரோ அங்குதான் எனக்குப் பரலோகம் இருக்கிறது, நான் இயேசுவுடனேயே இருக்க விரும்பு கிறேன்’ என்றாராம். இன்று நாம் இயேசுவோடு வாழ்கிறோமா? என்பதை யோசித்துப் பார்க்க அழைக்கப்படுகிறோம். நமது சரீரங்கள் தேவன் தங்கும் ஆலயங்களாக உள்ளனவா? பரிசுத்தமாக வாழும்படிக்கு நம்மை தேவனுக்கு அர்ப்பணித் திருக்கிறோமா? தேவனுடன் நாம் வாழுகிறோமா? என நம்மை நாமே சுயபரிசோதனை செய்துபார்ப்போம். கடவுளோடு வாழும்போது மாத்திரமே நமக்கு இவ்வுலகில் பாதுகாப்பு உண்டு.

3. பொருத்தனையை நிறைவேற்றவேண்டும்:- (வசனம்- 8)

‘‘நான் என்றைக்கும் உமது நாமத்தைத் துதித்துப் பாடுவேன். நான் உமக்குக் கூறிய உறுதிமொழியின்படியே ஒவ்வொரு நாளும் செய்வேன்’’ (வசனம்-8, பரி. பைபிள்).

இறைவனிடத்தில் நாம் செய்யும் எல்லா பொருத்தனைகளையும் (நாம் கொடுக்கும்

உறுதி மொழிகளை) காப்பாற்றுவதில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். சபை கூடியிருக்கும்போது வானத்துக்கும் பூமிக்கும் குதிப்பதும், உரத்த சத்தமாக ஊளையிடுவதும் கடவுளுக்கு உகந்த ஆராதனை ஆகாது. நமது தனிப்பட்ட வாழ்வில் நாம் ஆண்டவரோடு செய்த பொருத்தனைகளை எவ்வாறு நிறைவேற்றுகிறோம்? என்பதுதான் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

‘‘தேவ சமூகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையும் சொல்லாமலும் இரு. தேவன் வானத்தில் இருக்கிறார். நீ பூமியில் இருக்கிறாய். ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாய் இருப்பதாக.’’ (பிரசங்கி-5:2).

முடிவுரை:-

தாவீது அரசனைப்போல நாமும் தேவனுக்கு நெருக்கமாக வாழப் பழகிக்கொள் வோமானால், வாழ்வில் நாம் சந்திக்கும் எல்லா பிரச்சனைகளையும் எளிதில் சமாளிக்கவும் மேற்கொள்ளவும் முடியும். எனவே, தேவனோடு நெருங்கி வாழும் வாழ்வை வாழ நாம் அனைவரும் ஆசிப்போம். கர்த்தர்தாமே நம் அனைவரையும் ஆசீர்வதித்துக் காப்பாராக. ஆமென்.

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்...

# வேதாகம போட்டி-139 சரியான பதில் அளித்தோர்

1) அமிர்தகனி CHE
2) அன்பு சுதந்தரம் TIN
3) ஏஞ்சல் சி. TIN
4) ஏஞ்சல் ராஜதுரை CHE
5) ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
6) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
7) அரோமா சாத்ராக் TIN
8) ஆர்தர் மாசில்லாமணி CHE
9) அருள்செல்வி VIR
10) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
11) பங்கஜம் வில்சன் CBE
12) பெல்சி தங்கராஜ் CHE
13) பெனிட்டா பிராங்க்ளின் CHE
14) பெ.ஃ.ட்டி பிரின்ஸ் CHE
15) பியூலா அலெக்ஸ் CHE
16) பியூலா ஜேசுராஜன் PON
17) செலினா பென்சி வில்சன் CHE
18) சந்திராபாய் மாசிலாமணி AVD
19) சந்திரலேகா KAL
20) சந்திரா சாமுவேல் TIN
21) சார்லட் டேவிட் CHE
22) சிட்டி NOC
23) கிறிஸ்டல் ஜாய் யோபு TPT
24) கிறிஸ்துதாஸ் GOP
25) கிறிஸ்டி ஆயிட்டஸ் TIN
26) கிறிஸ்டி ஞானராஜ் CHE
27) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
28) டேனியல் தாமஸ் TIN
29) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
30) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
31) தெபோராள் ஆனந்தமணி CNG
32) டெல்பி பாத்திமா CHE
33) தேவமணி ஆபிரகாம் TUT
34) தேவநேசம் ராஜாசிங் CHE
35) டோராபாய் CHE
36) எஸ்தர் D.R. TIN
37) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
38) குளோரா BBC BD TEN
39) ஞானம் ஜெபராஜ் TIN
40) ஞானம் பிலிப் CBE
41) ஞானஜோதி பேரின்பம் VIR
42) ஞானராணி G. PAN
43) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
44) கிரேஸ்லின் சாந்தி CHE
45) கிரேஸியா ஜெயபால் CHE
46) கிரிசெல்டா செய்லர் CHE
47) ஹெலன் ஜான்சிராணி TIN
48) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
49) ஹெலன் திலக் TUT
50) ஹேமா அஜீத் CHE
51) ஹேமா கேப்ரியேல் MUM
52) ஹெப்சிபா மங்களராஜ் TIN
53) ஹிம்லா ராஜகுமாரி CHE
54) இந்திரா கெத்ஸி டேவிட் TIN
55) ஜமீலா செல்வராஜ் CHE
56) ஜேன்ஸ் ANM
57) ஜேன் தர்மராஜ் TIN
58) ஜெனிபர் சில்வியா TIN
59) ஜான்ஸி சந்தியா MAR
60) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
61) ஜெயகுமாரி CBE
62) ஜெபா ஜெயராஜ் AVD
63) ஜெபக்குட்டி மோசஸ் TIN
64) ஜெபசீலி கிளின்டன CHE
65) ஜெபஸ்டின் ஜி. KNR
66) ஜெபா சீனி MKM
67) ஜெமி ஜாய் பிளஸ்ஸி TIN
68) ஜெமீலா நிக்ஸன் CHE
69) ஜெனித்தா செல்வின் TIN
70) ஜெரின் ஸ்டீபன் CHE
71) ஜெஸி செல்லதுரை CBE
72) ஜெஸி ஜெயக்குமார் TIN
73) ஜெயா ஆல்பர்ட் KUM
74) ஜெயபால் D. ARM
75) ஜோனா ஸ்டீபன் AVD
76) ஜோஸ்பின் ஜெஸி CHE
77) ஜாய்ஸ் பாண்டியன் CHE
78) ஜுலியட் CHE
79) ஜுலியட் ஜெயக்குமார் TIN
80) கலா கிருபாகரன் TIN

## வேதாகம போட்டி-139 சரியான பதில் அளித்தோர் பட்டியலின் தொடர்ச்சி

81) கஸ்தூரி எலியாஸ் TIN
82) கலையரசி செல்வராஜ் CHE
83) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
84) லதா மைக்கேல்ராஜ்
85) லீலா டேவிட் CHE
86) லீலா ஜோஸப் CBE
87) லில்லி ஜாண்ஸன் CHE
88) லிஸி டென்சிங் TIN
89) மல்லிகா ஜாய்ஸ் TCY
90) மல்லிகா V. CHE
91) மணிமேகலை ஜெயக்குமார் TIN
92) மனோகரம் தனராஜ NAZ
93) மரிய பாப்பா CHE
94) மேரி தேவதாஸ் MDU
95) மேபல் கிறிஸ்டியான் CHE
96) மெஜிலா ஜோஷ்வா TUT
97) மெர்சிபா CBE
98) மெர்சி தனராஜ் CBE
99) மெரிட்டா ஜெயபாலன் TCY
100) மியூரியல் புஷ்பராஜ் CHE
101) நிக்ஸன் எவர்பிரைட் AP
102) ஆலிவ் ஜெயபாலன் CBE
103) பாக்யபாய் ஆரோன் TIN
104) பால் தங்கம் CHE
105) பெர்சி பால் SAW
106) பிங்க்லின் தேவமலர் CHE
107) பிரேமா பூபாலன் AVD
108) பிரேமா ஸ்டாலின் CHE
109) பிரின்ஸ் தயாநிதி CHE
110) பிரிசில்லா தாஸ் CHE
111) பிரிஸ்கில்லாள் சசி CBE
112) பிரியா ராஜ்குமார் CHE
113) ராஜபிரமிளா TPT
114) ராஜ்மேரி சார்லஸ் KER
115) ரமோலா அதிசயராஜ் TIN
116) ராணி பிரபாகரன் TIN
117) ராணி சாமுவேல்ராஜ் CHE
118) ரத்னா டென்னிஸன் CBE
119) ரத்னாவதி பாண்டியன் CHE
121) ரோஸ்லின் மார்கிரெட் CHE
122) ரோஸி ஸ்டீபன் CHE
123) ரூபவதி நோபிள் TIN
124) ரூபி பாஸ்கர் TPT
125) ரூபி ஜாண்ஸன் MUM
126) ரூத் ஜாண்ஸன் TIN
127) சாம்பு ஜெயச்சந்திரன MDU
128) சாமுவேல் டேவிட் TPT
129) சாமுவேல் பிரிதிவிராஜ் CBE
130) சாரா பாலசிங் MDU
131) சரோஜினி எலிசபெத் CHE
132) செல்வ அமுதா ஜார்ஜ் CHE
133) செல்வ பென்சி ஆபேல் AP
134) செல்வராணி ஆல்பர்ட் CHE
135) செல்வராணி G CHE
136) செல்வி அமிர்தராஜ் CHE
137) ஷாலி எடிசன் CHE
138) சாந்தி ஆல்பர்ட் PCT
139) சாந்தி ஜெபக்கனி KAL
140) ஷர்மிளா செல்வராஜ்.DR. CUD
141) ஷீபா சாம்ஸன் CHE
142) ஷீலா சாமுவோல் CUD
143) சவுந்தரம் சாலமோன் CHE
144) ஸ்டெல்லா டேவிட் TUT
145) ஸ்டெல்லா கனகராஜ் CHE
146) ஸ்டெல்லா சூசைய்யா TUT
147) சுகிர்தா ஆல்வின் CHE
148) சுகிர்தா சின்னதுரை TIN
149) சுஜாதா சாமுவேல் CHE
150) சுமித்ரா B.
151) சுசீலா தியோடர் TCY
152) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
153) தாரா மாணிக்கம் CHE
154) தெல்மா ஸ்டேன்லி MDU
155) வனஜா ஹெர்பர்ட் TIN
156) வசந்தா அன்பன் TIN
157) வசந்தி கருணாகரன் CHE
158) வசந்தி வாசன் CHE
159) விஜயராணி A. CHE
160) விஜி டேனியல் CHE
161) விமல் மேரி திரவியராஜ் MSK
162) வைலட் கிறிஸ்டோபர் TIN
163) வைலட் சைரஸ் CHE
164) வெஸ்லி சாமுவேல் TUT

# PRAYER-WINDOW PRAYER-WINDOW
## ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

### ஜெப–ஜன்னல் ஜெப நேரங்கள் ஜூன் – 2022

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 10–06–2022 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5முதல் 6மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 17–06–2022 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1முதல் 2மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 24–06–2022 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8முதல் 10மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப–ஜன்னல் ஜெப–நேரங்களில் தானி–6:10 வசனத்தின்படி **"தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க"** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப–ஜன்னல் ஜெப–வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

---

# திருச்சபை வரலாறு
## 2000ஆண்டு வரலாறு 2ம் வருகைக்குத் தயாராகு

## History of Christianity In India from 1st to 21 Century

**ஜூலை-2022 இதழில் ஆரம்பம்**

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு
(1முதல் 21ம் நூற்றாண்டு வரை)

## புதிய கட்டுரைத் தொடர்

எமது அடுத்தமாத இதழில் ஆரம்பமாகிறது.

கட்டுரை ஆசிரியர்: முனைவர். திருமதி. சலோமி மனோகர்
ஒய்வுபெற்ற உதவிப் பேராசிரியர், தூய. போப் கல்லூரி
சாயர்புரம், தூத்துக்குடி மாவட்டம்.

படித்துப் பயனடைவீர்!! ஆசீர்வாதம் பெறுவீர்!!

# வேதாகம போட்டி-140

வேதபகுதி
எஸ்தர்
சரித்திரம்

ஓரிரு வார்த்தைகளில் பதிலளிக்கவேண்டும்

பதில்களுடன் வேதவசன இருப்பிடம் எழுதவேண்டும்

பதிலளிக்க
கடைசி நாள்
ஜூன்-25

1. அரமனை வாசலில் ராஜாவின் ஊழியக்காரர் யாரை வணங்கி நமஸ்கரித்து வந்தார்கள்?
2. அகாஸ்வேரு ராஜா தன் கையிலிருந்த பொற்செங்கோலை யாரிடத்திற்கு நீட்டினான்?
3. வர்மம் வைத்து அகாஸ்வேரு ராஜா மேல் கைபோட வகைதேடியவர்கள் யார்?
4. அகாஸ்வேரு ராஜா சமஸ்த ஜனங்களுக்கும் 7நாள் விருந்து செய்வித்தது எங்கே?
5. தன் சிறிய தகப்பன் மகளான அத்சாளை வளர்த்துவந்தது யார்?
6. இரட்டு உடுத்திக்கொண்டு எங்கு பிரவேசிக்க ஒருவனுக்கும் உத்தரவில்லை?
7. ராஜாவுக்கு நித்திரை வராதபடியால் எதைக் கொண்டுவரச் சொன்னான்?
8. இந்துதேசம் முதல் எத்தியோப்பியா வரை 127நாடுகளை அரசாண்டது யார்?
9. ‘சட்டத்தை மீறி ராஜாவிடத்தில் பிரவேசிப்பேன், செத்தாலும் சாகிறேன்’ என்றது யார்?
10. யூதர் சூசான் அரமனையில் எத்தனைபேரை கொன்று நிர்மூலமாக்கினார்கள்?
11. மொர்தெகாயின் ஜனமாகிய யூதரையெல்லாம் சங்கரிக்க வகைதேடியது யார்?
12. அகாஸ்வேருவின் அரமனையிலே ஸ்திரீகளுக்கு ஒரு விருந்து செய்தது யார்?
13. அத்சாளின் மறு பெயர் என்ன?
14. மொர்தெகாயை ஆமானின் அரமனைக்கு அதிகாரியாய் வைத்தது யார்?
15. சூசானில் கொல்லப்பட்டு தூக்குமரத்தில் தூக்கிலிடப்பட்டவர்கள் யார்? எத்தனைபேர்?
16. இதோ ஆமானின் வீட்டை எஸ்தருக்குக் கொடுத்தேன் - யார்? யாரிடம் சொன்னது?
17. அகாஸ்வேருவுக்கு இரண்டாவதும், யூதருக்குள் பெரியவனுமாய் இருந்தவன் யார்?
18. மெகுமான், பிஸ்தா, அற்போனா, பிக்தா, அபக்தா, சேதார், கர்காஸ் - யார் இவர்கள்?
19. மொர்தெகாய்க்கு ஆயத்தம் செய்த தூக்குமரத்தில் யாரை தூக்கிப்போட்டார்கள்?
20. அம்மெத்தாவின் குமாரனாகிய ஆமான் என்னும் ஆகாகியனின் மனைவி யார்?

**வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

**ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST**

Mrs. Jeyaseeli Dharmaraja,
Flat: F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93.
E-mail: ratchippu@hotmail.com/sjddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463



சகோ. C. ஏஞ்சல்

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

THE SPIRITUAL ROCK PNEUMATIKON PETROS

## ஞானக்கன்மலை
## நியூமேட்டிக்கான் பெட்ராஸ்

பாகம் – 37 Episode - 37

எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே. 1கொரி–10:4

And did all drink the same spiritual drink: for they drank of that spiritual rock that followed them: and that rock was Christ. 1Cor-10:4

தாம் ஒருவரே ஞானமுள்ளவராயிருக்கிற தேவனும் ஞானக்கன்மலையுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு ஜூன்–மாத நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

**சங்கீதம்–18:46** என் கன்மலையானவர் துதிக்கப்படுவாராக.

**உபாகமம்–32:4** அவர் கன்மலை; அவர் கிரியை உத்தமமானது; அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன்; அவர் நீதியும் செம்மையுமானவர்.

**லூக்கா–6:48,47** ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின்மேல் அஸ்திபாரம்போட்டு, வீடு கட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்; பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும், அதை அசைக்கக் கூடாமற்போயிற்று; ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. யாருக்கு இந்த பாதுகாப்பு? தேவனுடைய பாதத்தில் வந்து வேதவசனங்களைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவர்களுக்கே. நாமும் இரட்சிப்பின் அனுபவத்துக்குள் வந்த நாட்களில் கடவுளின் வார்த்தைகளைக் கூர்ந்து கேட்டு அவைகளின்படி செய்திருப்போம். நாட்கள் செல்லச் செல்ல நமது சுயம், பெலன், மற்றும் அந்தஸ்து மேலோங்கி, "இந்த சின்ன காரியத்துக்காக தேவனைத் தொந்தரவு செய்யவேண்டாம், நாமே செயல்படுவோம்." என்று சுயமுயற்சி எடுத்து வெற்றியும் பெற்றிருப்போம். நாட்கள் செல்லச் செல்ல அதில் தீமைகள் வெளிப்படுவதைக் கண்டு, மறுபடியம் அவர் பாதத்தைப் பிடிப்போம். இந்த சுபாவ குணத்திலிருந்து விடுபட, "என் மாம்சமும் என் இருதயமும் மாண்டுபோகிறது; தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்." (சங்–73:26) என்ற வசனத்தை அறிக்கையிட்டு நம் இருதயங் களை அவர் கரத்தில் அர்பணிப்போம். நம் தேவன் அன்பும் இரக்கமும் உள்ள மன்னிக்கிற தேவன். அவர் நம்மேல் மனதுருகி நம்மை மன்னித்து நம்மை வழிநடத்துவார்.

**ஜெபம்:** எங்கள் கன்மலையும் எங்கள் மீட்பருமாகிய கர்த்தாவே உமக்கு ஸ்தோத்திரம். எங்கள் வாயின் வார்த்தைகளும், எங்கள் இருதயத்தின் தியானங்களும் உமது சமூகத்தில் பிரீதியாய் இருப்பதாக. உம்மைத் தவிர வேறே கன்மலையும் இல்லை. எங்கள் வாழ்வின் வனாந்தரத்தில் கன்மலையைப் பிளந்து மகா ஆழங்களிலிருந்து நீரோட்டங்களை உருவாக்கி ஆசீர்வாதங்களை நதியைப்போல் ஓடிவரச் செய்வீராக. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே. ஆமென். அல்லேலூயா.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
**C. Angel**

தேன்துளி வேதவசனக் கதை–133*. . .

# மரண தண்டனையா? மன்னிப்பா?

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A. M.Ed.



சகோ. அசரியா

அமெரிக்கா ஒரு வல்லரசாகத் திகழ்வதற்கு பல போர்-வெற்றிகளை ஈட்டியதோடு தனது எல்லைகளை ஜாக்கிரதையுடன் கண்காணித்து வந்ததும் காரணமாகும். இந்த பின்னணி யில் நடந்த ஒரு சம்பவம் இது. ஓர் இரவு வேளையில், அமெரிக்காவின் எல்லை பாது காப்புப் பணியில் இருந்த சார்லஸ் என்ற போர்வீரன், களைப்பின் மிகுதியால் தூங்கி விட்டான். பொதுவாக பணியில் தூங்கும் வீரர்களுக்கு மரணதண்டனை வழங்குவது அந்நாட்டின் சட்டமாகும். ஆகவே, சார்லசுக்கு நிச்சயம் மரணதண்டனை கிடைக்கும் என அனைவரும் எதிர்பார்த்தனர்.

இந்த செய்தி அன்றைய அமெரிக்க ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கனின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது. ஆபிரகாம் லிங்கனும் சார்லஸை அழைத்து நடந்த சம்பவம் பற்றியும் சார்லஸின் குடும்பம் பற்றியும் விசாரித்தார். சார்லஸின் தகப்பனார் இறந்துவிட்டார் என்பதையும், சார்லஸின் வருமானத்தைக் கொண்டுதான் அவனது விதவைத்தாயும், தம்பியும், தங்கையும் பராமரிக்கப்படுகிறார்கள் என்பதையும் ஆபிரகாம் லிங்கன் அறிந்துகொண்டார். விசாரணையின்போது சார்லஸ் தன் தவறை உணர்ந்து ஜனாதிபதி யிடம் மன்னிப்பு கேட்டான். எனவே சார்லஸுக்கு மரணதண்டனை வழங்காமல் அவனது தவறை உணர்த்தி அவனை மன்னித்துவிட்டார். போர்வீரன் சார்லஸும் ஆபிரகாம் லிங்கனுக்கு நன்றிகூறி முன்னிலும் சிறப்பாக தன் பணியைத் தொடர்ந்தான்.

நாட்கள் சென்றன, அமெரிக்கா தேசம் பல வெற்றிகளை குவித்து வல்லரசு நாடாக திகழ்ந்தது. ஆபிரகாம் லிங்கனிடம் இப்படிப்பட்ட நற்குணங்கள் காணப்பட்டபடியால் அமெரிக்காவை ஆட்சிசெய்த ஜனாதிபதிகளுள் சிறந்தவராக இன்றும் கருதப்படுகிறார்.

பிரிய விசுவாசிகளே! நம் வாழ்க்கையில்கூட பிறர் தப்பிதங்களை நாம் மன்னிக்கும்போது அவர்கள் மனந்திரும்பி அநேக மக்களை இயேசுவிடம் வழிநடத்தும் கருவிகளாக மாற தேவன் வழிநடத்துவார். வேதம் சொல்கிறது: பிறர் தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். பிறர் தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.(மத் 6:14-15). இந்நாட்களில் நிலத்தகராறு, சொத்து தகராறு, குடும்பப் பிரச்சனை, திருச்சபை தேர்தல் ஆகியவற்றால் பல துயர சம்பவங்கள் நடைபெறுவதை நாம் அறிவோம். இந்நிலை மாற, பிறர் குற்றங்களை மன்னித்து மறப்போம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார். வேதம் சொல்லுகிறது:

குற்றத்தை மன்னிப்பது மனிதனுக்கு மகிமை. நீதி 19:11

உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக. லூக்–17:3

கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல மன்னியுங்கள். கொலோ 3:13

கர்த்தர் மன்னிக்கிறதற்கு தயைபெருத்திருக்கிறார். ஏசா 55:7

# அனைவரும் ஊழியத்தில்

(ஒவ்வொருவரும் 15-கைப்பிரதிகளை விநியோகிக்கும் திட்டம்)

## ஓர் அழைப்பு

இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். கடந்த 11 ஆண்டுகளாக 'நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியம்' சார்பில் தமிழ் கைப்பிரதிகளை வெளியிட்டு திருச்சபை மற்றும் ஊழியர்களுக்கு இலவசமாக வழங்கி ஊழியங்களை நிறைவேற்றி வருகிறோம். அதன் ஒரு பகுதியாக, அனைவரும் கைப்பிரதி ஊழியங்களில் பங்குபெறும் வகையில், ஒவ்வொருவரும் 15-கைபிரதிகளை விநியோகிக்கும் 'அனைவரும் ஊழியத்தில்' என்ற புதிய திட்டத்தை வழங்குகிறோம். இத்திட்டத்தில் தேவபிள்ளைகள் அனைவரும் எவ்வித கட்டணமோ, விலையோ இன்றி பங்குபெறலாம். இத்திட்டத்தின் செயல்முறை பின்வருமாறு:-

1. இத்திட்டத்தில் பங்கு பெற விரும்பும் அன்பர்கள் தங்கள் விருப்பத்தை கடிதம், எஸ்.எம்.எஸ் அல்லது வாடஸ்-அப் வாயிலாக (கைப்பேசி: 9789914463, 7871676100) தங்கள் தபால் முகவரியை எமக்கு அனுப்பவேண்டும். (எமது முகவரி பக்கம் 19-ல்).

2. முகவரி கிடைத்தவுடன் தங்களுக்கு 15-கைப்பிரதிகளை அனுப்பிவைப்போம்.

3. கைப்பிரதிகள் உங்களுக்குக் கிடைத்தவுடன், நீங்கள் வீட்டிலிருந்தவாறே காய்கறி விற்போர், பால் போடுவோர், உங்கள் எலக்ட்ரீஷியன், பிளம்பர், கார்பென்டர், டிரைவர், குப்பை-வண்டிக்காரர், வீட்டு-வேலைசெய்வோர், சமையல் எரிவாயு வெண்டர், தபால்காரரர், சர்வீஸ் மெக்கானிக்குகள் ஆகியோரில் இயேசுவை அறியாதவர்களுக்கு ஜெபத்துடன் இந்த கைப்பிரதிகளை இலவசமாக வழங்கவேண்டும்.

4. கைப்பிரதிகளை உங்கள் அண்டைவீடுகளிலுள்ள இயேசுவை அறியாதோருக்கும் வழங்கலாம் அல்லது வெளியூரில் வாழும் இயேசுவை அறியாத உறவினர் மற்றும் நண்பர்களுக்கு தபாலில் (தபால் உறையில்) அனுப்பி வைக்கலாம்.

5. தங்களுக்கு அனுப்பப்பட்ட 15-கைப்பிரதிகளும் தீர்ந்த பின்னர் தங்கள் விருப்பத்தை தெரிவித்தால் மீண்டும் மீண்டும் 15-கைப்பிரதிகளை உங்களுக்கு அனுப்பிவைப்போம்.

இத்திட்டத்தின் மூலமாக சுமார் 10-ஆயிரம் கைப்பிரதிகளை இயேசுவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்ய திட்டமிட்டுள்ளோம். எனவே, இத்திட்டத்தில் இணைந்து நற்செய்தி அனைவருக்கும் பரவிட உதவுங்கள். இக்கைப்பிரதிகளை கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு வழங்குவதைத் தவிர்க்கும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

**அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குனர்,**
**நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சென்னை, தென்னிந்தியா.**

# எமது கைப்பிரதிகள்

## நல்ல விதைகள் – GOOD SEEDS

## நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்

### Good Tidings Bible-Prints Ministries

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! சுவிசேஷ ஊழியங்களின் பயன்பாட்டுக்காக 20-வகையான கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறோம் (கொரோனா காரணமாக தடைபட்ட இப்பணிகளை ஜெபத்துடன் மீண்டும் தொடரவிருக்கிறோம்). சுவிசேஷ ஊழியம் செய்யும் அன்பர்களுக்கும் திருச்சபைகளுக்கும் கைபிரதிகளை இலவசமாய் வழங்குகிறோம். ஒரு வகை கைப்பிரதி வெளியிட ஆகும் செலவு ரூ. 3000/- மட்டும். கைப்பிரதிகளை Sponsor செய்து இயேசுவின் அன்பை அனைத்து மக்களும் அறிந்திட உதவுங்கள். Sponsor செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறோம்.

| No.&Title of the Tract | Sponsor's Name |
|---|---|
| 1. மைனாவின் கதை - The story of Myna | - Rev. S.J.D. Dharmaraj, Che-93 |
| 2. வக்கீல் நீதிபதியானார் - Counsel became Judge | - Mr.T. David Manohar, Che-93 |
| 3. மாட்டு உண்ணி - The Cattle Tick | - Mr.R.G. Sutharsingh, Che-93 |
| 4. கர்வமான காகிதப்பட்டம் - The Envious Kite | - Mrs. Rani Samuelraj, Che-93 |
| 5. டிரைவர் இல்லாத ரயில் - A Train without Driver | - Mr. Prasad Samuel, Cud-6 |
| 6. சீரழிக்கும் சீமைக்கருவை - Acacia of fence | - Mr.P.H. Jaychandran, Che-93 |
| 7. குடிநீர் குழாயில் குண்டுத்தவளை - Frog in tap | - Mr.R.C.P. Nixon, Che-93 |
| 8. இளவரசனும் கைதியும் - Prince and the Convict | - Mr.J. Albert, Kumbakonam |
| 9. கடலில் கல்லறைத் தோட்டம் - Bermuda Triangle | - Mr.C. James, Sirkali |
| 10. பற்றியெரியும் மனிதர்கள் - Human Combustion | - Mr.S. Nixon Everbright, AP |
| 11. டைட்டானிக் கப்பல் - The Titanic Ship | - Dr. Sharmila Selvaraj, Cud-1 |
| 12. நாக்குப்பூச்சி - The Tape Worm | - Mr. Arthur Masilamani, Che-7 |
| 13. அதிசய சொட்டு மருந்து - Miracle Drops | - Rev. S.J.D. Dharmaraj, Ch-93 |
| 14. எரியும் முன் எச்சரிக்கை - Warning before death | -Mr.A. Santharaj, Kumbakonam |
| 15. பிணக்குவியலில் இருந்து - From pile of Corpses | - Mr. S.J.P. Raja, Che-126 |
| 16. வெந்நீரில் தவளை - The Frog Experiment | - Mrs. Stella David, Tuticorine |
| 17. கன்கார்டு விமானம் - The Concord Aircraft | - Mr.B. Wilson, Che-92 |
| 18. ஜீன் வால் ஜீன் - Jean Valjean | - Mr. Samson Abraham, Che-93 |
| 19. பெர்லின் சுவர் - The Berlin Wall | |
| 20. மரணத்தின் சாலை - El Camino de la Muerte | - Mr.A. Inbaraj, Kumbakonam |

கைப்பிரதிகளை Sponsor செய்த தேவபிள்ளைகளுக்கு எங்கள் நன்றி. நற்செய்தி கைப்பிரதிகளை எங்களிடம் இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன் படுத்தும்படி அன்புடன் வேண்டுகிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சென்னை-93. தென்னிந்தியா.

# ஜெப-ஜன்னல் நன்றி-பலிகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடி ஜெபிப்போம் - Come! Let us intercede to God**

1) அகில உலக மக்களின் சுக வாழ்வுக்காக... உக்ரைன் போர், இலங்கை பொருளாதார சீர்கேடு - மக்கள் போராட்டம் முடிவுக்கு வர... பெருந்தொற்று, புயல்-மழை, காட்டுத் தீ போன்ற இயற்கை பேரிடர்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட... பிரிவினை - பயங்கரவாதம் போன்றவற்றி லிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்திய பொருளாதாரம் சீரடைய... இந்திய ஒன்றிய அரசு அனைத்து மாநிலங்களுக்கும் நடுநிலையாக செயல்பட... விலைவாசிகள் கட்டுப்படுத்தப் பட... அனைத்து மாநிலங்களுக்கும் சரக்கு-சேவை வரி நிலுவை மற்றும் மாநிலங்களுக்கான இழப்பீட்டு நிதியை ஒன்றிய அரசு பாரபட்சமின்றி வழங்க...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... கொரோனா 4ம் அலை வராதிருக்க... மக்கள் இன - மத - மொழி வேறுபாடின்றி ஒற்றுமையாய் வாழ... தமிழ்நாட்டில் விவசாயம் மற்றும் தொழில்கள், வியாபாரம் சிறக்க... தமிழ்நாட்டு மீனவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட... புயல் - மழை - வெள்ளம் - கொரோனா பாதிப்புகளிலிருந்து மக்கள் மீண்டுவர...

4) திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) உயர் கல்வி பயின்று வரும் நம் பிள்ளைகள் கி.்.ப்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜாஷ்வா மேத்யூ, ஷெர்லி ஜூடியா, டிரிசியா லவ்ஸ்லி, ஜாய்ஸ் கிறிஸ்டினா, ஜோ.்.ப்னா, ஜெனிபர், கி.்.ப்ட்லின், ஜோயின்ஸ், டேனியல், ஜான்ஸி ப்ளோரா, ஜேனிஸ், ஜெஸிக்கா, சிந்தியா பிரகாஷ், ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

6) திருமதி. ்.பிளாரன்ஸ் ராஜமணி, திரு. எபெனேசர், திரு. பி.ஹெச். ஜெயச்சந்திரன், திருமதி. ஈவ்லின் சிப்பெர், திருமதி. எபனேசர், திரு. சாம் எலியேசர், திருமதி. ஹெலன் திலக், திருமதி. லீலா மனோகரசிங், திரு. அசரியா ஞானதாஸ், திரு. பிலிப், திருமதி. ஞானரத்தினபாய், திருமதி. தங்கம் ஜோன்ஸ், திருமதி. மேரி கிரேஸ் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

7) திருமதி. மேரி தேவதாஸ், திருமதி. ஐரீன் வாக்கர், திருமதி. வசந்தா அன்பன், திருமதி. வனஜா ஹெர்பர்ட், திருமதி. மகிமா சந்திரன், திருமதி. மங்களராணி ஞானப் பிரகாசம், திருமதி. கிரெடா ஐசக், திருமதி. ஹேமலதா ராஜமணி, திருமதி. சார்லெட் டேவிட், திருமதி. குளோரி ஜெயபால், திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. அலீஸ் ரெஜினாபாய், திரு. அப்பன் டேவிட், திருமதி. சரஸ்வதி கிறிஸ்துதாஸ் ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

8) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. அரோமா சாத்ராக், திரு. பொன்ராஜ் கிறிஸ் டோபர், திருமதி. பிரேலின் ராஜதுரை, திரு. சாம்சன் ஆபிரகாம், திருமதி. நிறைமதி ஜாண்ஸன், திரு.எஸ்.ஜே.பி. ராஜா, திரு. நிக்ஸன் எவர்பிரைட், திரு. பி.ஹெச். ஜெயச்சந்திரன், திரு.அசரியா ஞானதாஸ், திருமதி. தெல்மா ஸ்டேன்லி, திருமதி. ஜாஸ்மின் ஞானதாஸ் ஆகியோருக்காக... அவர்களுடைய குடும்பத்துக்காக...

9) ஆண்டிறுதித் தேர்வுகளை எழுதியுள்ள நம் பிள்ளைகளுக்கு சிறந்த வெற்றி கிடைக்க...

10) திருமதி. பிரின்ஸி, திருமதி. ஜெபசீலி, திருமதி. மெர்லின், திருமதி. கவுலின், திருமதி. லெஷ்மி ஆகியோரின் சுகத்துக்காக... சுக பிரசவத்திற்காக...

# வேதாகம போட்டி-139 (நெகேமியா)

## சரியான விடைகள்

1. மத்தனியா நெகே:-11:7
2. அம்மோனியர்,மோவாபியர்:-13:1
3. சன்பலாத், தொபியா நெகே:-2:10
4. தெக்கோவா ஊர் நெகே:-3:5
5. செமாயா நெகே:-6:10
6. திர்ஷாதா நெகே:-7:70
7. நியா.பிர.புஸ்தகத்தை நெகே:-8:5
8. மல்கியா நெகே:-3:31
9. ஆபிராமை நெகே:-9:7
10. சாலோமோன் நெகே:-13:26
11. தொபியா நெகே:-4:3
12. வாழ்த்தினார்கள் நெகே:-11:2
13. அதிபதிகள் வாங்கும் படி நெகே:-5:14
14. அனனியா நெகே:-7:2
15. எலியாசிப் நெகே:-13:7
16. ஆசாப் நெகே:-2:8
17. தேவ.நி.பிர. புஸ்தகம் நெகே:-8:18
18. இல்கியா மகன் செராயா நெகே:-11:11
19. ஐம்பத்து இரண்டு நெகே:-6:15
20. நிதனீமியர் நெகே:-3:26

## CONTACT DETAILS AND BANK DETAILS OF OUR MINISTRIES


**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**
**CALL**: 9962924900/9789914464.
**WHATSAPP:** 9789914463/7871676100
**E-MAIL**: ratchippu@hotmail.com/ sjddharmaraja@gmail.com
**POSTALADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93.
**WEBSITE ADDRESS:** www.ratchippu.in/ratchippu.in

**BANK DETAILS FOR SENDING OFFERTORY**
**NAME:** DHARMARAJA SJD.
**S.B.ACCOUNT NO**: 601071548.
**BANK:** INDIAN BANK,
**BRANCH:** NESAPAKKAM BRANCH
**IFSC CODE:** IDIB000N122.
**BANK ADDRESS:** K.K.NAGAR, CHENNAI-78.
**GOOGLE PAY (G-PAY) NAME AND NO.:**
REV. DHARMARAJA SJD: 9789914463


**கல்விப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

**இரட்சிப்பு** பத்திரிக்கையின் அன்பான வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர் கள், அலுவலக-வலைதள பணியாளர்கள், நல்ல-விதைகள்-கைபிரதி களப்பணி யாளர்கள், அச்சகத்தார், தபால்-துறை அன்பர்கள், அனைத்துத் திருச்சபை குடும்பத் தார் ஆகிய உங்களில் பெற்றோர், ஆசிரியர், மாணவராகிய அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த கல்விப் புத்தாண்டு-2022 நல்வாழ்த்துக்கள்.




**இரட்சிப்பு**
ஊழிய-குடும்பத்தார்

Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 10th June 2022.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.

# செய்தித்துளிகள்

1. சிலி நாட்டில் ‘பெரிய-தாத்தா’ எனப்படும் 4-மீ தடிமனான அலர்ஸ் மிலேனாரியோ சைப்ரஸ் மரம், உலகின் மிகப் பழமையான மரம் (5,484வயது) என உறுதியானதாக பிரெஞ்சு நாட்டு விஞ்ஞானியான ஜோனத்தான் பேரிசிவிச் தகவல்.

2. இந்தியாவில், இரண்டாயிரம் ரூபாய் கரன்சி நோட்டு களின் புழக்கம் மதிப்பு ரீதியில், கடந்த இரு நிதியாண்டுகளில் 22.6 சதவீதத்திலிருந்த 13.8 சதவீதமாக குறைந்துள்ளதாக ரிசர்வ் வங்கியின் ஆண்டறிக்கையில் தகவல்.

3. மே-21ம் நாள் 9, 94, 890-தேர்வர்கள் எழுதிய டி.என்.பி. எஸ்.சி குரூப் 2 மற்றும் 2-ஏ முதல்நிலை தேர்வுகளுக்கான விடைக்குறிப்பை www.tnpsc.gov.in என்ற இணையதளத்தில் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டது.

4. ஜப்பானின் ஷார்ப் நிறுவனம் WJR-515-VH என்ற குடிநீர் ஃபில்டரை அறிமுகம் செய்துள்ளது. இதில் கொரோனா நுண்கிருமிகள், ரசாயன-நச்சு போன்ற மாசுகள் 6-நிலைகளில் RO மற்றும் IR-கதிர் முறையில் சுத்திகரிக்கப்படுகிறது.

5. சீனாவின் ஹாங்சோ நகரில் வரும் அக்டோபர் 9-முதல் 15-வரை நடக்கவிருந்த 4-வது பாரா ஆசிய விளையாட்டு போட்டிகள் கொரோனா தொற்று பரவல் காரணமாக காலவரையின்றி தள்ளிவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

Posted on: 10th June 2022

To

If undelivered Please return to:

**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93, TAMILNADU, SOUTH INDIA.

Owned & Published by: S.J.D.Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.